# கம்பஹா மாநகர சபை

# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மார்ச் 30 ஆந் திகதியும் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2010 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கம்பஹா மாநகர சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டிற்காகச் கிடைக்க வேண்டிய உறுப்பினர்படி மீளளிப்பு ரூபா 232,000 தொகை கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கம்பஹா மீன் விற்பனைக் கடைகள் மற்றும் கடைத்தொகுதிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,801,638 தொகையான பகுதிக் கொடுப்பனவு மூலதனச் செலவினக் கணக்கிற்கும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைக் கணக்கிற்கும் சாட்டுதல் செய்வதற்குப் பதிலாக முற்பணக் கொடுப்பனவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) குப்பைகளை மாற்றீடு செய்யும் நிலையத்திற்காக மாதாந்தம் செலுத்தப்பட்ட வாடகை ரூபா 500,000 தொகையானது முற்கொடுப்பனவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2009 ஆம் ஆண்டில் மாகாண சபை நிதியுதவியான ரூபா 26,314,636 தொகையில் மீளச் செலுத்துவதற்கு எஞ்சியிருந்த ரூபா 14,249,906 தொகையான மீதியை கணக்குகளுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2006, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளுக்காகச் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணமான ரூபா 487,261 தொகைக்காாக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வின் பிரகாரம் கணிப்பீடு செய்யப்பட்ட இறுதியிருப்பு ரூபா 2,190,753 ஆக இருந்ததுடன் இருப்புக் கணக்கு மீதி ரூபா 2,186,635 ஆனமையால் ரூபா 4,118 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(எ) நிலையான சொத்துக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 56,029,440 ஆக இருந்தபோதிலும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கு மீதி ரூபா 53,926,993 ஆனமையால் ரூபா 2,102,447 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஏ) மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 77,110 பெறுமதியான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) 2010 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட 23 மாகாணசபை செயற்திட்டங்களுக்கு கிடைத்த ரூபா 4,517,740 தொகை பெறவேண்டிய மாகாணசபை உதவிக் கணக்கில் செலவில் வைக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது பற்றுச் சீட்டிடப்படாமையினால் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை மாகாண சபை உதவி மீதி அந்த பெறுமானத்தினால் குறைவாகக் காணப்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) நிதிக்கூற்றுக்களில் கிடைக்கவேண்டிய/ செலுத்தவேண்டிய முற்கொடுப்பனவுகள் தனித்தனியாக காண்பிப்பதற்குப் பதிலாக பெறவேண்டிய முற்கொடுப்பனவு ரூபா 32,095,783 இலிருந்து செலுத்தவேண்டிய முற்கொடுப்பனவு ரூபா 1,605,160 தொகை கழிக்கப்பட்டு தேறிய மீதி காண்பிக்கப்பட்டிருந்தது. பெறவேண்டிய முற்கொடுப்பனவுப் பட்டோலை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 32,089,383 ஆக இருந்தது.

(ஓ) இருப்புப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்ட ரூபா 480,511 கூட்டுத்தொகையான களஞ்சியப் பொருட்களின் பெறுமதி கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஔ) கணக்கு வைக்கப்பட்டிருந்த ரூபா 17,942 பெறுமதியான களஞ்சியப் பொருட்கள் இருப்புப் பதிவேடுகளில் உள்ளடக்கப்படவில்லை.

(க) முதலீடு செய்யப்பட்டிருந்த ஊழியர் பிணை ரூபா 13,500 இற்குரிய வட்டி கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வியாபார வாடகை மீதி ரூபா 1,091,988 ஆக இருந்த போதிலும் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் நிலுவை வாடகை மீதி ரூபா 747,750 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 வருடத்தை விஞ்சிய கடன்கொடுத்தோர் கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 98,152,749 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

**தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 102,309,709 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய முடியாதுள்ளது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்ககளுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 266(அ) ஆம் பிரிவு | சபைக்கு கிடைக்க வேண்டிய வேலை முற்கொடுப்பனவுகள் ரூபா 335,395 தொகை அமைச்சரின் அங்கீகாரமின்றி பதிவழிக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) இலங்கை குடியரசின் தாபன விதிக் கோவை | |
| (i) XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | ஓய்வு பெற்ற, மரணித்த மற்றும் மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி அந்த உத்தியோகத்தர்களின் ஓய்வூதியப் பணிக்கொடையில், மரணப்பணிக் கொடையில் அல்லது பிணையாளரிடமிருந்து அறவிட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யாமையினால் ரூபா 617,589 தொகையான கடன் மீதி அறவிட முடியாமல் காணப்பட்டது. |
| (ii) XXIV ஆம் அத்தியாயத்தின் 4.6 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது ரூபா 11,830 தொகையான அறவிட முடியாதிருந்த ஊழியர் கடனை ஏடுகளிலிருந்து பதிவழிக்கும் போது அதற்காக சட்டமாஅதிபரிடமிருந்து ஆலோசனை பெறப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,730,666 ஆக இருந்ததுடன், அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,438,404 ஆக இருந்தது.

### 2.2 நிதிக்கட்டுப்பாடுகள்

(அ) காசோலைகளைக் கையளிக்கும் போது கையேற்றவர்களின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், கையேற்கப்பட்ட திகதி போன்ற தகவல்கள் பெறப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 260 இற்கு முரணாக குறிப்பிட்ட நபர்களுக்கு பணம் செலுத்தாது ஒப்பந்தங்களுக்குரிய காசோலைகள் விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்குக் கையளிக்கப்பட்டிருந்தன.

(ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 395(இ) இன் பிரகாரம் ஒவ்வொரு மாதத்தினதும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2011 சனவரி வரையில் சபை நிதியத்திற்குரிய வங்கிக் கணக்குகளில் 2010 ஒக்தோபர் மாதத்தின் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகராதிபதியினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது. இருந்த போதிலும் அத்தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் காணப்படுகின்ற தகவல்களுடன் இணக்கஞ்செய்த போது பிழையாகக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

| | வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்டது | 2010 உள்ளவா றானது | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பிடப் பட்டது | 2009 உள்ளவா றானது | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 43,251 | 29,546 | 13,705 | 44,448 | 26,457 | 17,991 |
| (ii) | வாடகை | 20,055 | 3,033 | 17,023 | 29,607 | 13,590 | 16,017 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,493 | 3,185 | 308 | 3,448 | 2,882 | 567 |
| (iv) | ஏனைய வருமானம் | 209,151 | 157,666 | 51,484 | 247,010 | 159,735 | 87,274 |

இதன் பிரகாரம் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் மற்றும் நகராதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை வருமானம் என்பவற்றுக்கிடையே பின்வரும் வேறுபாடுகள் வெளிப்படுத்தப்பட்டது.

| | | 2010 நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் | 2010 நகராதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் | 2010 வேறுபாடு | 2009 நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் | 2009 நகராதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் | 2009 வேறுபாடு |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | நிலுவையாக இருந்த வீதவரி | 12,379 | 13,705 | (1,326) | 16,388 | 17,991 | (1,603) |
| (ii) | நிலுவையாக இருந்த ஏனைய வருமானம் | 88,598 | 68,815 | 19,783 | 105,944 | 103,858 | 2,086 |

## 2.4 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப்பட்டது | 2010 உள்ளவாறானது | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டது | 2009 உள்ளவாறானது | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா'000 | ரூபா '000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா '000 | ரூபா'000 |
| **மீண்டுவரும் செலவினம்** | | | | | | |
| ஆளணி வேதனம் | 71,253 | 73,022 | (1,769) | 67,363 | 71,711 | (4,348) |
| ஏனையவை | 62,452 | 54,834 | 7,618 | 66,537 | 48,427 | 18,110 |
| உப மொத்தம் | 133,705 | 127,856 | 5,849 | 133,900 | 120,138 | 13,762 |
| மூலதனச் செலவினம் | 11,213 | 48,460 | (37,247) | 293,091 | 102,490 | 190,601 |
| மொத்தம் | 144,918 | 176,316 | (31,398) | 426,991 | 222,628 | 204,363 |

## 2.5 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் தரம் | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளவாறானது | |
|---|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 07 | 06 | (நகர ஆணையாளர் மற்றும் நகர செயலாளர் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றுகின்றனர்) |
| இரண்டாம் தரத்தினர் | 113 | 104 | |
| ஆரம்ப தரத்தினர் | 200 | 158 | |
| ஏனைய(அமைய, தற்காலிக) | - | 09 | |
| மொத்தம் | 320 | 277 | |

## 2.6 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.6.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப் பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

(அ) பலவருட காலமாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 370,091 தொகையான செயற்பாடற்ற வங்கிக் கணக்கு மீதி தொடர்பாக ஆராய்ந்து பார்த்து உறுதிப்படுத்திக் கொள்வதற்கோ அல்லது வேறு கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீதி ரூபா 602,144 தொகையான திறசர வங்கிக் கணக்கு 2009 யூலை தொடக்கம் செயற்பாடற்ற நிலைமையில் காணப்பட்டதுடன் அக்கணக்கு செயற்படும் தன்மைக்கு மாற்றுவதற்கோ அல்லது வேறு கணக்கிற்கு மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.6.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 32,095,783 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 31,689,383 ஆக இருந்தது.

### 2.6.3 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 15,037,564 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 588,692 ஆக இருந்தது.

### 2.6.4 அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒரு வருட காலத்தினை விஞ்சி அசையாது காணப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 126,730 ஆக இருந்தது.

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

### (அ) ரூபா 530,400 தொகையில் 4 கணனிகள் மற்றும் உப பாகங்களின் கொள்வனவு

(i) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.8.1(ஆ) பிரிவின் பிரகாரம் விடயம் தொடர்பான விசேட நிபுணரினாலும் மற்றும் கொள்வனவு செயல் நடைமுறை தொடர்பான போதியளவான அறிவினைக் கொண்ட ஆகக் குறைந்தது ஒரு அங்கத்தவரினாலும் உடன்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் தொழில்நுட்ப மதிப்பீடு செய்யவேண்டிய போதிலும் அதற்கு முரணாக தனியார் கணனி ஆலோசனையாளர் எனக் குறிப்பிடப்பட்ட ஒருவருக்கு தொழில்நுட்ப மதிப்பீடு கையளிக்கப்பட்டிருந்தது.

(ii) தனியார் கணனி ஆலோசனையாளரினால் தயாரிக்கப்பட்ட தொழில்நுட்ப மாதிரிகள் சபையின் தேவைக்கு ஏற்ப இருந்தமை கேள்விச் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) குப்பைகளை மாற்றும் நிலையத்தை நடாத்துவதற்காக காணியை வடகைக்குப் பெறல்

குப்பைகளை மாற்றும் நிலையத்திற்காக வெயான்கொட தடகமுவ தம்புவத்த காணியில் மாதாந்தம் ரூபா 100,000 செலுத்தும் அடிப்படையில் 2010 செப்தெம்பர் 21 ஆந் திகதி ஒரு ஏக்கர் வாடகைக்கு பெறப்பட்டு அதற்காக ஒரு நபருக்கு ரூபா 700.000 செலுத்தப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மாநகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 229(1) ஆம் பிரிவின் பிரகாரம் கொடுக்கல் வாங்கல்களுக்காக கொள்வனவு நடைமுறைகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கழிவுகளை மாற்றும் நிலையத்தை வாடகைக்குப் பெறுவதற்கான உடன்படிக்கை கையொப்பமிடப்பட்ட 2010 செப்தெம்பர் 21 ஆந் திகதியில் உள்ளவாறு கிட்டிய முன்னைய மூன்று மாதங்களான யூன், யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களுக்காகா ரூபா மூன்று இலட்சம் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) குப்பைகள் மாற்றும் நிலையமாகத் தெரிவு செய்யப்பட்ட காணி அத்தனகல்ல பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குரிய காணியாக இருந்ததுடன் கம்பஹா மாநகர சபையின் குப்பைகளை அவ்விடத்தில் குவிப்பதற்கு அத்தனகல்ல பிரதேச சபையில் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(iv) இந்த இடத்தில் கழிவுகளை போடுவதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையிலிருந்தும் சுகாதார வைத்திய உத்தியோகத்தரிடமிருந்தும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(v) வாடகை உடன்படிக்கை இல. 6 இன் நிபந்தனையின் பிரகாரம் ஒதுக்கப்பட்ட காணியில் விளக்கு பொருத்தப்பட்ட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) உடன்படிக்கை இல. 11 ஆவது நிபந்தனையின் பிரகாரம் அரசாங்க மதிப்பீட்டாளர்களின் மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகைத் தொகை தீர்மானிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் அரசாங்க மதிப்பீட்டாளரினால் வழங்கப்பட்ட மாதாந்த மதிப்பீட்டு வாடகை ரூபா 30,000 என அறிக்கையிடப்பட்டிருந்தது. 2010 திசெம்பர் 21 ஆந் திகதி நடைபெற்ற நிதிச் செயற்குழுவின் சிபார்சு மற்றும் 2011 சனவரி 05 ஆந் திகதி நடைபெற்ற பொதுச் சபைக்குட்பட்ட அங்கீகாரம் என்பவற்றின் அடிப்படையில் வாடகையாளருக்கு மாதாந்தம் ரூபா ஒரு இலட்சம் படி செலுத்தப்பட்டிருந்தது.

(vii) வாடகையாளருடன் கையொப்பமிடப்பட்டிருந்த உடன்படிக்கை இல. 7 இன் நிபந்தனையின் பிரகாரம் ஓர் ஏக்கர் அளவு மாநகர சபைக்கு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. உரிய நிலப் பகுதியில் கழிவுகளைப் போடுவதற்காக பயன்படுத்தப்படாமல் அதற்காக கம்பஹா பிரதேச சபையினால் கழிவுகளை அகற்றி போடுகின்ற இடமாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(viii) வாடகை உடன்படிக்கை இல. 9 இன் நிபந்தனையின் பிரகாரம் கழிவுகளை அகற்றி போடுகின்ற இடத்தில் எவருக்கும் குப்பைகளைத் தெரிவதற்கு இடமளிக்க முடியாதிருந்த போதிலும் கழிவுகளுடன் உள்ள போத்தல், பிளாஸ்டிக், கண்ணாடிகள் போன்றவைகள் தெரிவு

செய்யப்பட்டு வேறாக்கப்பட்டிருந்தமை 2011 பெப்ரவரி 24 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ix) அத்தனகல்ல பிரதேச சபையினால் 2010 ஆம் ஆண்டின் போது காணியில் இந்த இடத்திலேயே கழிவுகள் இறுதியாகப் போடப்பட்டிருந்ததுடன் 2011 ஆம் ஆண்டின் போது கம்பஹா பிரதேச சபையும் இந்த இடத்தில் குப்பைகளை கடைசியாக போட்டிருந்தமை பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது அதன் பிரகாரம் கம்பஹா மாநகர சபையும் இந்த இடத்தில் குப்பை அகற்றுதல்கனை மேற்கொள்ள முடியாத வகையில் குப்பைகளை எடுத்துச் செல்வதற்கு தனியார் கம்பனிக்கு கையளிக்கப்பட்டு ஆண்டின் போது அவர்களுக்கு அதற்காக ரூபா 5,541,117 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(x) இந்தக் காணியில் அத்தனகல்ல பிரதேச சபையினாலும் கம்பஹா பிரதேச சபையினாலும் நீண்ட காலமாக அகற்றப்படுகின்ற கழிவுகள் பாரியளவில் குவிக்கப்பட்டமையினாலும் மாநகர சபைக்காக இந்தக் காணியில் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டிராமையினாலும் காணியின் வரைபடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பிரதான வீதிக்குரிய பகுதி குப்பைகளை மாற்றுவதற்காக ஈடுபடுத்தப்படாமையினால் மாநகர சபையின் கழிவுகளை இந்த இடத்திற்கு எடுத்துச் சென்ற பின்னர் பான்ஸ் என்வயர்மென்டல் கம்பனியினால் குப்பைகளை அகற்றுதல் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமான பரீட்சிப்பொன்றை மேற்கொள்ள முடியாதிருந்தது.

(xi) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 130 ஆவது பிரிவின் பிரகாரம் கழிவுகள் சபையின் சொத்தாக இருக்கின்றமையால் கழிவுகள் வகைப்படுத்தப்பட்டு மீள் சுழற்சி செய்வதற்கோ அல்லது கூட்டுப்பசளை உற்பத்திக்காக ஈடுபடுத்துவதற்கோ சபையினால் முடியாதிருந்தது. அதன் காரணமாக கொண்டு வரப்பட்ட கழிவுகளை அகற்றுவதற்காக 2010 ஆம் ஆண்டின் போது இரண்டு ஒப்பந்தக்காரருக்கு ரூபா 6,241,117 கொடுப்பனவும் அதற்கு மேலதிகமாக கழிவுகளைச் சேமிப்பதற்காக ஈடுபடுத்தப்படுகின்ற சபையின் வாகனம் மற்றும் ஊழியர் பராமரிப்புச் செலவினம் என பாரிய தொகையினைச் செலவிட வேண்டியிருந்தது.

**(இ) வேலை ஆரம்பிப்பு முற்பணத்திற்காக பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டமை**

கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பிரிவின் பிரகாரம் வேலை ஆரம்பிப்பு முற்பணத்திற்காக பெறுமதி சேர் வரி செலுத்த முடியாதிருந்த போதிலும் முற்பணத் தொகைக்கு பெறமதி சேர் வரி சேர்க்கப்பட்டமையினால் செயற்திட்டத்திற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 2,915,229 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

**பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.**

(அ) நானாவித வருமானங்களை கணணி மயப்படுத்தும் மென்பொருளுக்காக ரூபா 90,000 தொகையும் ஆலோசனைச் சேவைக்காக ரூபா 46,000 தொகையும் தனியார் வழங்குனருக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2010 திசெம்பர் 31 வரையும் நானாவித வருமானங்களை கணணி மயப்படுத்தும் செயற்பாடுகள் முடிவடைந்திருக்கவில்லை. உள்ளூராட்சி ஆணையாளரின் 2001 ஒக்தோபர் 12 ஆந் திகதிய எல்ஜீ/15/2001 ஆம் இலக்க ''உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆதனவரி முகாமைத்துவம், கணணி மயப்படுத்தல்'' சுற்று நிரூபத்தின் பிரகாரம் ஆதனவரி கணணி மயப்படுத்தும் மென்பொருளுக்காக செலுத்த முடியுமான ஆகக்கூடிய தொகை ரூபா 35,000 மற்றும் ஆலோசனைச் சேவைக்காக செலுத்தக்கூடிய தொகை நாளொன்றுக்கு ரூபா 1,200 ஆக இருந்த போதிலும் அந் நிபந்தனைகளை மீறி மென்பொருள் மற்றும் ஆலோசனைச் சேவைக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) தீ அணைப்புப் பிரிவில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட கப் வாகனம் தீ அணைக்கும் கடமைகளுக்குப் புறம்பாக '' நகரபிதா கடமை'' எனக் காண்பிக்கப்பட்டு சபை அதிகாரப் பிரதேசத்திலும் அதன் வெளியிலும் ஓடப்பட்டிருந்த அனேக சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. 2010 சனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரை அவ்வாறு ஓடப்பட்டிருந்த தூரம் கி.மீ 6561 ஆக இருந்தது.

(இ) மாநகர சபை அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே நடை பெறுகின்ற திருவிழாக்கள், விளையாட்டு விழாக்கள், பெரஹெர சமய விழாக்கள் போன்றவற்றுக்காக அச் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துகின்ற நிறுவனங்களின் கோரிக்கையின் பிரகாரம் சபையின் தீயணைக்கும் வாகனம் மற்றும் நீர் பவுசர்

என்பன ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக எவ்வித கட்டணமும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) காண்களைச் சுத்தப்படுத்தும் செயற்திட்டத்திற்காக 20 அமையத் தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் 2010 சனவரி தொடக்கம் நவம்பர் வரை தொழிலாளர் சம்பளமாக ரூபா 2,216,338 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், நாளாந்த சேவை அறிக்கையின் பிரகாரம் இந்த தொழிலாளர்கள் வீதிகளைக் கூட்டுதல், வீதிகளின் கழிவுப்பொருட்களை சேகரித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும், மீளாய்வாண்டின் போது நிரந்தர சேவையில் அமர்த்தப்பட்ட 65 சுகாதாரத் தொழிலாளர்கள் மற்றும் 32 வீதித் தொழிலாளர்கள் சபையில் சேவையாற்றியிருந்ததுடன் இந்த நிரந்தர தொழிலாளர்கள் மற்றும் காண்களைச் சுத்திகரிக்கும் செயற்திட்டத்தின் தொழிலாளர்களின் கடமைகள் பிரித்து ஒதுக்கப்பட்டிருக்காமையினால் செயற்திட்ட தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்துவதின் அவசியம் தொடர்பாக கணக்காய்வின் போது எற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(உ) 2005 யூலை 08 ஆந் திகதிய 1400/25 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் iv (அ) பிரிவில் பிரசுரிக்கப்பட்ட மாநகர சபையின் நகராதிபதி, பிரதி நகராதிபதி மற்றும் உறுப்பினர்கள் என்போரின் பிரயாணச் செலவுகள் செலுத்தும் கட்டளையின் பிரகாரம் பிரயாணச் செலவு கொடுப்பனவிற்காக மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் சபையின் தீர்மானத்தினால் கையளிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அத எந்த ஒரு உத்தியோகத்தருக்கும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த நிதி பிரமானங்களுக்கு முரணாக தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சுகாதாரப் பரிசோதகர் மற்றும் வேலைக் கட்டுப்பாளருக்குரிய கடமைகள் நிறைவேற்றப்பட்டமை காண்பிக்கப்பட்டு நகராதிபதியின் அங்கீகாரத்தின் அடிப்படையில் உறுப்பினர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 665,310 தொகை மோட்டார் வாகன மைல் கூலி செலுத்தப்பட்டிருந்தன.

## 2.9 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

----------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவை வீட்டு வாடகை மீதி ரூபா 127,613 தொகையில் மரணித்த 12 உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 56,451 தொகையும் ஓய்வு பெற்றுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களின் ரூபா 11,680 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்த

நிலுவை மீதிகளை அந்த உத்தியோகத்தருக்கு உரித்தான பணிக்கொடைப் பணத்திலிருந்து அறவீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 மே 02 ஆந் திகதி தொடக்கம் 2009 யூன் 8 வரையான காலத்தில் வட மாகாணத்தில் நிர்க்கதிக்குள்ளாகிய மக்களை மீளக் குடியமர்த்தும் செயற்பாடுகளின் கடமையில் ஈடுபடுத்தப்பட்ட தீயணைக்கும் வாகனத்தின் சாரதி மற்றும் வாகன உதவியாளர்களின் மேலதிக நேர மற்றும் இணைந்த படிகள் ரூபா 139,398 தொகை மேல் மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து மீளளிப்புச் செய்ய வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 32,068,107 தொகையான முற்கொடுப்பனவு மீதியில் ரூபா 1,494,654 தொகை செயற்பாடற்ற முற்கொடுப்பனவாக் காணப்பட்டதுடன் இதனை தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.10 உள்ளகக் கணக்காய்வு**

---------------------------------------

நிறுவனத்தில் போதியளவில் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கணக்காய்வு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்து முகாமைத்துவம்